

# விளையாட்டுப்பிள்ளை ஆர்த்தி

அனுஷா ஸ்ரீதரன்
(ஆத்ம போதா)

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics

2.3

STEM-Kalvi Charity



பொழுது நன்றாக விடிந்து விட்டது. ஆர்த்தி இன்னும் படுக்கையிலேயே இருந்தாள். அம்மாவின் குரல் கேட்டது. “ஆர்த்தி எழும்புங்கோ, பாடசாலைக்கு செல்ல வேண்டும்”.



ஆர்த்தியோ, மணிக்கடிகாரத்தின், டிக்-டோக் ஓசையை கேட்டபடி படுத்திருந்தாள். அவள் கடிகாரத் துடிப்பை, மனதில், எண்ணிக் கொண்டிருந்தாள்.

*“27, 28, 29, 30, .......”*



அப்பா படுக்கை அறைக்குள் வந்தார்.
ஆர்த்தியின் தலையை வருடியபடி
எழுந்திருக்கச் சொன்னார். அவள் அப்பாவின்
செல்லப் பிள்ளை.



ஆர்த்தி எழுந்து காலைக் கடமைகளை முடித்தபின், அப்பாவுடன், ஸ்கூட்டரில் பாடசாலைக்குச் சென்றாள்.




வீதியில் செல்லும் பேருந்துகள், கார்கள், முச்சக்கர வாகனங்களை, ஆர்த்தி, பார்த்தாள். வாகனங்களில் பதித்திருந்த எண்களை, மனதில் கூட்டி கணக்குப் போட்டாள்.



பாடசாலையை வந்தடைந்ததும், ஆர்த்தி, அப்பாவிற்கு “டா டா” காட்டினாள். பின்பு தனது வகுப்பிற்குச் செல்ல படிகளில் ஏறினாள்.



ஆர்த்தி படிக்கட்டில் ஏறும்போது, ஒவ்வொரு படியாக எண்ணிக் கொண்டே ஏறினாள். இரண்டிரண்டாக எண்ணினாள். மூம்மூன்றாக எண்ணினாள்.



பாடசாலை தொடங்கும் மணி ஒலித்தது. மணி அடித்த சத்தம் கூட ஆர்த்திக்கு கேட்கவில்லை. ஆர்த்தி, தொடர்ந்து படிகளை எண்ணி விளையாடிக் கொண்டிருந்தாள்.



அவ்வழி வந்த அதிபர், ஆர்த்தியை, வகுப்பிற்குச் செல்லுமாறு கண்டித்தார்.



ஆர்த்தி யன்னல் வழியாக, ஐஸ்கிரீம் வண்டியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த ஆசிரியர், அவளைக் கண்டித்தார்.



ஆர்த்தி இவ்வாறாகவே ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டாள். ஆசிரியர்கள் அடிக்கடி அவளைக் கண்டித்தனர். அம்மாவிடம் திட்டு வாங்கினாள். அப்பாவும் கவலைப்பட்டார்.



கணிதப் பரீட்சை நெருங்கியது. ஆர்த்தி பரீட்சையில் சித்தியடைவாளா என அம்மாவும், அப்பாவும் நினைத்து கவலைப்பட்டார்கள்.



ஆனால், ஆர்த்தி, கணித பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தாள். ஆசிரியர்களும், அம்மாவும், அப்பாவும், மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அவளின் திறமையை உணர்ந்து கொண்டனர்.



ஆர்த்தி, விளையாடுவதன் மூலம் கற்கக் கூடியவள் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :**Anusha Sritharan, Australia

**Book:** Vilaiyadduppillai Arthy
(விளையாட்டுப்பிள்ளை ஆர்த்தி)

**Language: Tamil**

**Reading Level**: 2.3

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the '**1000 Reading Books**' initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer:** Anusha was born in Colombo, Sri Lanka, and currently resides in Melbourne, Australia. She holds a PhD in Brain Imaging from Monash University in Melbourne, Australia. Currently, she is developing a math series to illustrate the broader applications of mathematics beyond traditional classrooms. She expresses her thanks to STEM KALVI for the opportunity to contribute to literacy development as part of their 1000 Reading Book Initiative and is thankful to Saravanamuthu Rajacon for his support in all her writing endeavours.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics